விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 ஐப்பசி 8 முஹறம் 18 இதழ் 254
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-10-83


# இலங்கைத் தமிழர் பிரச்னை: தமிழக அரசின் நடவடிக்கை

## விரைவில் அறிவிக்கப்படும் என்கிறார் எம். ஜி. ஆர்.

(சென்னை)

''இலங்கைத் தமிழர்பிரச்னை தொடர்பாக தமிழ்நாடு அரசு எடுக்கவிருக்கும் சில நடவடிக்கைகள் பற்றி விரைவில் அறிவிக்கப்படும். என்று தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் நடைபெற்ற அண்ணா அறக்கட்டளை நிதியத்தின் பரிசளிப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இத் தகவலை திரு. ராமச்சந்திரன் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

''தற்போது அமெரிக்காவில் தங்கிருக்கும் தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் திரு. பண்டிருட்டி எஸ். ராமச்சந்திரன் நாடு திரும்பியதும், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக நான் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளின் விபரங்கள் பற்றித் தெரிவிக்கப்படும்'' என்று கூறினார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் 4 மணி நேரம் ஆர்ப்பாட்டம்!

## ஊர்வலத்தில் 2000 பேர் கலந்து கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களை தமிழ்ப்பகுதிக்கு மாற்றுமாறு கோரி இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியமும், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையும் இணைந்து சுலோக அட்டைகளைத் தாங்கி யாழ். பல்கலைக்கழகத்தைச்சுற்றியுள்ள வீதிகளில் சுமார் 4மணிநேரம் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினார்கள்.

யாழ்.பலாலி சந்தியிலிருந்து இடம்பெயர்ந்த பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் திரு. த. தயாபரன், யாழ். மாணவர் அவை செயலாளர் ஆகியோர் தலைமையில் ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் மாணவிகள் உட்பட சுமார் 2000பேர் பங்குபற்றினர்.

காலை 8 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அதிகளவு சுலோக அட்டைகள் காணப்பட்டன. இந்த ஊாவலத்தை வீதியோரத்தில் நின்று மக்கள் பார்யிட்டனர். ஊர்வலம் சென்ற பாதைகளில், போக்குவரத்துகள் சிறுது நேரம் ஸ்தம்பித்தன.

'ஜூலைக் கொலைகளை மறக்க மாட்டோம்' என்றும், மாணவர் சக்தி மாபெரும் சக்தி' என்றும், மாணவர்கள் என்ன பலிக்கடாக்களா? பல்கலைக்கழகம் வெலிக்கடைச் சிறையா? என்றும் மாணவர்கள்கோஷங்களை எழுப்பிக்கொண்டு சென்றனர்.

''சகல பீடங்களையும் தமிழ் மண்ணில் தொடங்கு ''சிங்கள மாணவருக்கு உடன் இடமாற்றம் தமிழ் மாணவருக்கு என்றும் ஏமாற்றம். என்றும் அவர்கள் கோஷமிட்டுக் கொண்டுசென்றனர்.

'பாய்ந்த குருதி காயமுன்பு படிக்கவரும்படி அழைப்பா?

(8ம் பக்கம் பார்க்க)

## பாஷையூர் பிரசவவிடுதி வளவில் அத்துமீறிக் குடியேறியோர் வெளியேற்றப்பட்டனர்!

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் பிரசவ விடுதி வளவிற்குள் அத்துமீறிக்குடியேறிய 15குடும்பங்கள் நேற்றுக்காலை பொலிசாரின் உதவியுடன் மாநகரசபை ஊழியர்களால் வெளியேற்றப்பட்டனர்.

யாழ். மாநகரசபைக்குசொந்தமான இந்த அரை ஏக்கர் நிலத்திலுள்ள பிரசவவிடுதி தற்பொழுது இயங்கி வருகிறது.

மேலும் அவ்வளவிற்குள் உள்ள பத்துக் குடும்பங்கள் இன்று வெளியேற்றப்படுவார்

(ம் 8 பக்கம பார்க்க)

## தமிழக சட்டசபைக் கூட்டத்தில் நேற்று கறுப்புச் சட்டையுடன் சபைக்கு வந்த அமைச்சர்கள், அங்கத்தவர்கள்!

(சென்னை)

இலங்கை இனக்கலவரத்தில் உயிரையும் உடமைகளையும் இழந்த தமிழ் மக்களுக்கு தமிழ்நாடு சட்டசபை தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது!

சட்டசபையின் மழைகாலக் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானபோது சபாநாயகர் திரு ராஜராம் இது தொடர்பான அனுதாபத் தீர்மானத்தைச் சமர்ட பித்தார்.

இத்தீர்மானத்தில் இலங்கையில் கடந்த ஜுலையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது

சட்டசபை நேற்றுக்கூடியபோது இலங்கைச் சம்பவங்களைக் கண்டித்து அ. தி. மு. க. அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்து வந்திருந்தனர்.

சபை கூடியதும் இலங்கையில் உயிர்நீத்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டுநிமிட நேரம் மௌன அஞ்சலிசெலுத்தினர்.

இதன்பின்னர் சபாநாயகர் திரு. ராஜராம் அனுதாபத்தீர்

(8ம் பக்கம் பார்க்க

## பரந்தனில் ரூ.33000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பரந்தன் எரிபொருள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிமுனையில் 33,00 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது.

எரிபொருள் நிலையத்திற்குச்

(8ம் பக்கம் பார்க்க)

## வருமானவரி இலாகாவில் பாதிக்கப்பட்ட ஊழியர் திரும்புவதில்லை என முடிவு

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் சமர்ப்பித்த கோரிக்கைகள் தொடர்பாக பதில்வரும்வரை வேலைக்கு திரும்பி செல்வதில்லை என்று நேற்றுயாழ்ப்பாணத்தில்கூடிய பாதிக்கப்பட்ட வருமானவரி இலாகா ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக்காலை திரு. எஸ். மண்டலநாதர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துவந்த 100வருமானவரி இலாகா ஊழியர் கலந்துகொண்டனர்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. பிரட்மன்வீரக்கோனிடம் இடமாற்றம், ஓய்வு பெறுதல் குடியமர்வு அலவன்ஸ் தொடர்பான மகஜர் ஒன்றை பாதிக்கப்பட்டவரு

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழக சட்டசபையில் கூட்டணித் தலைவர்கள்!

(சென்னை)

தமிழக சட்டசபையின் பார்வையாளர் பகுதியில் நேற்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் பலர் காணப்பட்டனர்!

சட்டசபையின் கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானபோது கூட்டணித்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், முன்னாள் எம். பி. க்களான திரு. த சிவசிதம்பரம். திரு. வெ. யோகேஸ்வரன், திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. இரா. சம்பந்தன் ஆகியோர் பார்வையாளர் பகுதியில் இருந்தனர். தமிழக சபாநாயகர் திரு. ராஜாராமின் அழைப்பின் பேரிலேயே இவர்கள் சென்றனர். (கு)


வியாபாரிகட்கும்,
ப. நோ. கூ. சங்கங்கட்கும்

ஓர் நற்செய்தி!

எங்களிடம்
லக்ஸ்பிறே, யானை தீப்பெட்டி, நெஸ்லே
பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு
எங்களிடம் வாங்கும் உள்ளூர் விலை பொருட்களில்
விசேட கழிவுகளும் - சலுகைகளும்
வழங்கப்படும்.

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்.

எஸ். வி. முருகேசு,
தொலைபேசி இல: 22564. நம்: 154, ஆஸ்பத்திரி வீதி,
(9479) யாழ்ப்பாணம்.



உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் ருதிரோற்காரி வருடம் ஐப்பசிமாதம் 9-ம்நாள் (26-10-83) புதன்கிழமை பகல் 10-00 மணி தொடக்கம் 11-14 மணி வரையுள்ள தனுலக்கின சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
நல்லநாதன்
(சட்டத்தரணி)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
சித்திராதேவி
(ஆசிரியை, வேலணை ம. ம. வி.)
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் இத்திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்களும் குடும்பசமேதரராய்ச் சமுகந்தந்து மணமக்களை
ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி சி. சண்முகராசா,
11/1, ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (9502)

திருமதி நா. கந்தையா,
புளியங்கூடல் சந்தி,
வேலணை.

# சரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய பாவித்த வீடியோ கசற், ரெலிவிசன், வீடியோ டெக் பாவிக்க முடியாத ரெலிவிசன் என்பனவும் நியாய விலையில் வாங்கப்படும். விலை குறித்து முழு விபரங்களுடன் விண்ணப்பிக்குக. விளம்பர இல: 9458. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9458

திருநெல்வேலிச் சந்தியில் வியாபார நிலையம் கட்ட மிக உகந்த காணித்துண்டும் (நாலு லட்சம்) 9 ஸ்ரீ வோக்ஸ்வகன் காரும் விற்பனைக்கு. தொடர்பு: 73/1, பலாலி ரோட், கந்தர் மடம். 9409

ஆனைக்கோட்டைக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் கொக்குவில் போகும் ரோட்டில் பிடாரி கோவில் உபதபால் நிலையத்திற்கு அருகில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தநிலம். விபரங்களுக்கு: நாதன் ரெக்ஸ் ரைல்ஸ், 179, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம். தொலைபேசி: 23691. (9503)

## தவறிவிட்டது

19-10-83 அன்று சாதகக் குறிப்புகளும் ஒரு புத்தகமும் அடங்கிய பார்சல் ஒன்று அராலிக்கும்-சங்கரத்தை சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும் அல்லதுதகவல் தரவும். திருமதி N. பாலசுப்பிரமணியம், (வாலையம்மன் கோவிலுக்கு அருகாமையில்) அராலி கிழக்கு, அராலி. தகுந்த சன்மானம் வழங்கப்படும். 9507

## சேவை

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்தமுறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். 9145

## தேவை

சகல வசதிகளுடன் 3 அல்லது 4 அறைகளைக்கொண்ட வீடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்குத்தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9468 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 9468

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

---

**கடுகு சிறிது காரம் பெரிது!**

யப்பானில்
I. K. O. Co. Ltd-ல்
தயாரிக்கப்பட்ட

**POWDER GLUE**

ஒரு துளியால்,
ஒரு நொடியில்
எந்தப் பொருளையும்
ஒட்டலாம்!
அதிசக்தி வாய்ந்த
உறுதியான ஒட்டும்
திராவகம்!

**வடபகுதி எங்கும்
ரூ, 35க்கு
விற்பனையாகிறது!**

வியாபாரிகளுக்கு
விசேட கழிவுண்டு
கடிதத்தில்
தொடர்புகொள்ளவும்:-

**க. பரராசசேகரன்**
9/8, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
9441

---

**2ம் வருட நினைவஞ்சலி**



**திருமதி
கண்மணி கந்தையா**

தோற்றம்: 27-12-1922
மறைவு: 17-10-1981

கருவுலகில் உருவாகி
மறுவுலகில் வரும்நாளைக்
கண்டறிந்து சொல்வாருண்டு - இந்தத்
திருவுடலில் குடியிருக்கும்
சீவன் பிரியும் நாளைத்
தெரிந்தொருவர்சொன்னதுண்டோ?

அன்னுரை நினைவுகூரும்

கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

73, குமாரபுரம்,
பரந்தன்.
9512

---

# மன்னார்ச் செய்திகள்

## விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றது.

விளையாட்டுத்துறை அமைச்சு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை மன்னாருக்கு வழங்கியதை யடுத்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.எம். ஜீவரத்தினம் தெரிவித்தார்.

## வீடியோ படம்: பொலிசார் நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் வியாபாரநோக்குடன் வீடியோ படம் காண்பிப்போர்மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை மன்னார் ஊர்க் காவற்படையினரின் ஒத்துழைப்புடன் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி மேற்கொண்டுவருகிறது.

## மன்னாருக்கு மேலதிக பொலிஸார்

மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவென மேலதிகமாக 60 பொலிசார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தற்காலிகமாக 3 மாதங்கள் மட்டுமே கடமையாற்றுவார்கள்.


மன்னார், தலைமன்னார், முருங்கன் ஆகிய பொலிஸ் நிலையங்களில் தலா 20 பேர் வீதம் இவர்கள் கடமையாற்றுவார்கள்.

இப்பொலிஸ் குழுவினரை வழிநடத்துவதற்கு வசதியாக தலைமன்னார், மன்னார், முருங்கன் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்குத் தனித்தனியே ஒவ்வொரு உதவிப் பொலிஸ்அத்தியட்சகர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (சூ)

---

**2-வது ஆண்டு நினைவஞ்சலி**

**டாக்டர்
செல்லையா
துரைராஜசிங்கம்**



தோற்றம்: 21-08-1916
மறைவு: 01-11-1981

ஆண்டு இரண்டு
மறைந்துவிட்டாலும்
ஆறாத் துயருறும் நாம்,
தந்தையே உங்கள்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சாம்பல்தீவு,
திருகோணமலை. 9504

---

**வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க**

---

Old Student of Jaffna College Vaddukoddai Presently a Chartered Civil Engineer in a leading consultant firm in U. K. wishes to secure building Contracts in Jaffna. Please contact

BISON ENGINEERING ENTERPRISES
PANDATERUPPU
Phone: Pandateruppu 898.

[9446]

---

# WANTED

Norwegian People's Relief Association wants to hire a Van for a period of one month. Please contact us at

**HOTEL GNANAMS**
299, CLOCK TOWER ROAD, JAFFNA
Telephone: 22082.
after 5 p. m. today (25-10-83). 9510

---

# மக்கள் வங்கி

## வாகனங்கள் விற்பதற்கான கேள்விப்பத்திரம்

கீழே குறிக்கப்பட்ட வாகனங்கள் (உழவு இயந்திரங்கள்) விற்பதற்கான சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் மக்கள் வங்கி, பிரதேச முகாமையாளரால் 09-11-83 மாலை 4-00 மணிவரை கோரப்படுகின்றன,

பார்வையிட விரும்புவோர் கிளை முகாமையாளர், மக்கள் வங்கி பரந்தன் அவர்களின் முன் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்களை, மீளப்பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/-ஐ வங்கி அலுவல் நேரங்களில் கிளை முகாமையாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

சித்திபெறும் கேள்விப்பத்திரக்காரர் ஒரு கிழமைத் தவணைக்குள் முழு விற்பனைப்பணத்தையும் செலுத்தி வங்கி வளவிலிருந்து வாகனம்/வாகனங்களை அகற்றுதல்வேண்டும். தவறின் வைப்புப்பணம் ரூபா 250/-ஐ இழக்க நேரிடும்.

இக்கேள்விப்பத்திர விஷயமான எந்த முடிவும் பிரதேச முகாமையாளருக்கே உரித்தாகும்.

1. 36 SRI 6009 FORD 3600
2. 55 SRI 3647 MASSEY FERGUSON

பிரதேச முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம். 9415

---

# பதவி வெற்றிடம்

## பொதுமுகாமையாளர் தரம் II

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் பொதுமுகாமையாளர் தரம் II பதவிக்கு நிரந்தரமான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. தகுதியான விண்ணப்பகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது (எமது ஸ்தாபனம், நுகர்ச்சி, கைத்தொழில் பகுதிகளை அடக்கியது).

சம்பளத்திட்டம்— 500—825 / 20×10——25×5 (எல்லாப்படிகளும் உட்பட ரூபா922/-)

தகைமை—
1. கூட்டுறவுப் பயிற்சியுடன் 3 வருடகால அனுபவமுடைய பட்டதாரி; அல்லது,
2. இரண்டு வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப்பத்திரம் உடைய பட்டதாரி; அல்லது,
3. தரம் III பதவியொன்றில் ஒரு வருடகால அனுபவமும், கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப் பத்திரமும் பெற்றுள்ள பட்டதாரி; அல்லது,
4. 50 லட்சம் ரூபாவினை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருடகால அனுபவத்தினையுடைய ஒருவர், அல்லது,
5. 10 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர்.

வயது— 23—50 (நிரந்தர கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

பிணை— உரொக்கம் ரூபா 2500/-ம், உறுதிப் பிணை ரூபா 5000/-மும் செலுத்துதல் வேண்டும்,

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என்னும் விலாசத்திற்கு 10-11-1983 பி. ப. 4-00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல்வேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.
9483

---

# நல்ல வீடு விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலியில் ஒன்றேகால் பரப்பில், நீர், மின்சார வசதிகளுடன் நான்கு அறைகள் கொண்ட நவீன முறையில் அமைக்கப்பட்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.

விபரங்களுக்கு:

**10/7, சிவன்கோவில் வீதி,
திருநெல்வேலி.**

9505

# பெய்ரூட் குண்டு வெடிப்பு:

# 160 பேர் பலி! பலர் காயம்!

பெய்ரூட், அக். 24

பெய்ரூட்டில் நேற்று இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 160 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறு பலியானவர்களில் அமெரிக்க கடற்படை வீரர்களும் பிரெஞ்சுத்துருப்புக்களும், பொதுமக்களும் அடங்குவார்கள். இச்சம்பவத்தில் பலர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது:

மத்திய கிழக்கு சமாதானப் படையில் கடமையாற்றிய அமெரிக்க, பிரெஞ்சுத் துருப்புக்களே இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களின் போது பலியானார்கள்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு 'சுதந்திர இஸ்லாமியப் புரட்சி இயக்கம்' தானே காரணமென்று அறிவித்துள்ளது.

இந்த குண்டுவெடிப்புச் சம்பவங்களின் போது தமது இயக்கத்தைச் சேர்ந்த இருவர் பலியானதாகவும் அது தெரிவித்துள்ளது.

இச்சம்பவங்களுக்கும் தனக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று பாலஸ்தீனியவிடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தையிட்டு அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் கவலை தெரிவித்துள்ளார். அவர் இக்குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக தனது பாதுகாப்பு அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தவுள்ளார்.

இதன் பொருட்டு திரு. றீகன் ஜோர்ஜியாவிலிருந்து நேற்று வாஷிங்டன் பயணமானார்.

இச்சம்பவத்தை அமெரிக்க காங்கிரஸின் எதிர்க்கட்சித் தலைவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

செனட்டர் எட்வேட் கென்னடி இக்குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க காங்கிரஸில் ஆற்றிய உரை தீவிரமானதாக இருந்தது என்று கூறப்பட்டது.

பெய்ரூட் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் பலியான அமெரிக்க வீரர்களின் இடத்திற்கு மேலும் அமெரிக்க வீரர்கள் லெபனானுக்கு அனுப்பப்படுவார்களென்று அமெரிக்கபாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். இவர்கள் நாளை லெபனான் போய்ச்சேருவார்களென்றும் அவர் தெரிவித்தார்.

பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களையடுத்து அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் தமது வெளிநாட்டுப் பயணங்களை ரத்துச்செய்துள்ளார். (வெ)

## பஞ்சாப் பிரச்னை: பேச்சுக்களை ஆரம்பிக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

புதுடில்லி, அக். 24

பஞ்சாப் பிரச்னை தொடர்பான முத்தரப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு ஜனதா உட்பட 5 எதிர்க்கட்சிகள் இந்திய மத்திய அரசைக் கேட்டுள்ளன.

பஞ்சாப்பில் அகாலிகள் நடத்திவரும் கிளர்ச்சிகளை நிறுத்துமாறும் இந்த எதிர்க்கட்சிகள் அகாலிகள் தலைவர்களைக் கேட்டுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களையும் இக்கட்சிகள் கண்டித்துள்ளன.

பஞ்சாப் பிரச்னை தொடர்பாக அகாலிகள் தலைவர்களுடன் ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் பேச்சு வார்த்தை நடத்தினர். (வெ)

## இந்திய - சீன பேச்சுக்கள்

புதுடில்லி, அக். 24

இந்திய-சீனஎல்லைப்பிரச்னை, மற்றும் இரு தரப்பு உறவுகள் குறித்த பேச்சவார்த்தைகள் இன்று புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பேச்சுவார்த்தைகளில் சீனாவின் சார்பில் சீன வெளிநாட்டமைச்சர் தலைமையிலான 8 உறுப்பினர்கள் குழு கலந்து கொள்ளவுள்ளது.

இந்தியாவின் சார்பில் இந்திய வெளிநாட்டமைச்சரின் செயலாளர் திரு. வாஜ்பாய் தலைமையிலான 17 உறுப்பினர்கள் குழு கலந்து கொள்ளவுள்ளது. (வெ)

## "சர்வதேச கடற் பிராந்தியத்தில்

# இந்தியக் கப்பலை நிறுத்திவைக்கவும்'

### சென்னை மீனவர் சங்கம் மகஜர்

சென்னை, அக். 24

''சர்வதேச கடற்பிராந்தியத்தில்இந்தியக்கப்பல்ஒன்றை நிறுத்திவைக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்''.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை சென்னை மீனவர் சங்கம் தமிழ்நாடுஅரசிடம் சமர்ப்பித்துள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இந்தியாவின் கடற்பதிகளில் மீன்பிடித்துவரும் மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினரால் எறபட்டுவரும் துன்புறுத்தல்களையும் இதன் மூலம் தடுத்துநிறுத்தமுடியும்.

''இலங்கை கடற்படையினரின் துன்புறுத்தல்களால் ராமேஸ்வரம், தூத்துக்குடி மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்''. (வெ)

## இடம்பெயர்ந்த ஊழியருடன் ஆணையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களில் விற்பனையாளர், களஞ்சியப் பொறுப்பாளர், காசாளர் ஆகிய தரத்தினரை, தொழில் திணைக்கள ஆணையாளர் திரு. எஸ். சிவபாஸ்கரன் இன்று சந்தித்து உரையாடவுள்ளார்.

யாழ். நகர மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை இச்சந்திப்பு நடைபெறுவதற்கான ஒழுங்குகளை, பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

திரு. எஸ். சிவபரஸ்கரன் இம்மாதம் 25-ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பிரச்னைகளை ஆராய்வதோடு தனியார்துறை ஊழியர்களையும், முதலாளிமார் சம்மேளனங்களையும் சந்தித்து உரையாடுவார். (மா)

## கீதைப் பேருரை

(யர்ழ்ப்பாணம்)

சுவாமி தத்வானந்தாவின் கீதைப் பேருரை இன்றும் எதிர்வரும் வியாழன் ஞாயிறு ஆகிய நாட்களிலும் மாலைவேளைகளில் நல்லூரில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கோயில் வீதியிலுள்ள 69ம் இலக்க இல்லத்தில் நடைபெறும் இப்பேருரையில் கீதையின் 9ம் அத்தியாயத்தின் ராஜவித்தியா, ராஜகுஷ்ய யோகம் என்னும் பொருளில் சுவாமி உரைநிகழ்த்துவார்.

## உணவுப் பார்சல் அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

மாதகல் அகதிகள் முகாமிலுள்ள அகதிகளுக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் கடந்த சனிக்கிழமையன்று உணவு பார்சல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

முன்னாள் மாவட்ட ஆளுநர் டாக்டர் போர்டினன்ட் இந்த உணவுப்பார்சல்களை வட்டு லயன்ஸ் கழகத்தின் சார்பில் கையளித்தார்.

# ஈரான்-ஈராக்யுத்தம் தீவிரமடைகிறது

## 146 ஈரானியர் பலி!

தெஹ்ரான், அக். 24

ஈரான்-ஈராக் யுத்தம் தீவிரமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது. ஈரானிய இலக்குகள் மீது ஈராக் ராக்கெட் குண்டுத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது

ஈரானிய நகரங்களில் ஈராக் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதாகவும், இதனால் 146 ஈரானியர்கள் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் ஈராக் வானொலி அறிவித்தது.

அதேவேளை ஈராக்கின் 700 சதுரமைல் பிரதேசத்தைத் தாம் கைப்பற்றியுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. (வெ)

## பாக். ஆர்ப்பாட்டங்கள்:

# 4,000 பேர் கைது!

இஸ்லாமாபாத், அக். 24

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சிக்கெதிராகக் கடந்த பத்துநாட்களாக இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களையடுத்து 4,000 பேரை அந்நாட்டு அரசாங்கம் கைதுசெய்துள்ளது.

துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர்கள் மூலம் பாகிஸ்தானிலுள்ள சில கிராமங்கள் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு எதிர்கட்சித் தலைவரொருவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்துமாறும் பொதுத் தேர்தலை நடத்துமாறும் கோரி அந்நாட்டு எதிர்க்கட்சிகள் நாடுமுழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்திவருவது தெரிந்ததே. (வெ)

## தமிழ்ஈழம் கோரிக்கையை தமிழக கட்சிகள் ஆதரிப்பதைவரவேற்கிறேன்

### இலங்கை அரசின் கவலை இயல்பானதே என்றும் கூறுகிறார் 'தொண்டமான்'

(சென்னை)

''இலங்கைத் தமிழ் மக்களின் 'தமிழ் ஈழம்' கோரிக்கையை தமிழ்நாடு அரசியல் கட்சிகள் ஆதரிப்பதை நான் வரவேற்கிறேன்.

''இலங்கையின் உள்விவகாரங்களில் தமிழ்நாடு அரசியல் கட்சிகள் தலையிடாது ஒதுங்கிநிற்கவேண்டும் என்று இலங்கை அதிபர் திரு. ஜயவர்த்தன கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கை சிறுபான்மை தமிழருக்கு வலுவான ஆதரவு தமிழ்நாட்டில் காணப்படுவது இலங்கை அரசுக்கு வருத்தத்தை தோற்றுவித்திருப்பது இயல்பே''

இ. தொ. கா. தலைவரும், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் சென்னையிலிருந்து வெளியாகும் 'தினமலர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அப் பேட்டியில் மேலும் அவர் தெரிவித்ததாவது;

1977க்கு முன்பு இந்திய தமிழரும் ஆறுஅம்ச பொதுத் திட்ட அடிப்படையில் தமிழர் விடுதலை முன்னணி ஒன்றை அமைத்திருந்தனர். இந்தக் கூட்டணியின் தலைவராக நான் பதவிவகித்தேன். சிங்களவருக்கு சமதையான அந்தஸ்து தமிழருக்கும் அளிக்கப்படவேண்டும். அதிகாரத்தைப் பரவலாக்கவேண்டும். ஜாதி அடிப்படை ஒழிக்கப்படவேண்டும். தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம் தடைசெய்யப்படவேண்டும் என்பவை இந்த ஆறு அம்சத் திட்டத்தில் உள்ளடங்கியவையாகும்.

1977ல் இலங்கைத் தமிழர் இந்தக்கூட்டணியை உடைத்து ஆறு அம்சத் திட்டத்தை தூக்கிஎறிந்துவிட்டு தனிஈழநாடு கோரிக்கையை வற்புறுத்தத் தொடங்கிவிட்டனர்! இதனால் கூட்டணி 1977ல் உடைந்துபோய்விட்டது

### தமிழ் ஈழத்தால் பிரச்னை தீராது

இலங்கைத் தமிழர் பிரச்னை தனிஈழம் கிடைப்பதால் தீர்ந்துவிடாது.

(7ம்.பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

குளத்தில் மீன்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் ஓர் இரையைப் போட்டதும், நாலாபக்கங்களிலிருந்தும் அதனிடம் ஓடிவருகின்றன. அதுபோல நம் மனத்தடாகத்தில் பத்திசிரத்தையைப் போட்டோமானல் பகவான் அதை தேடி ஓடிவருகின்றான்.

— ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

# நமது நோக்கு

## சௌமியமூர்த்தியின் அரசியல் சாதுர்யம்

எங்கு எதை எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டும், எவ்வாறு பேசிக்கொள்ள வேண்டுமென்ற அனுபவசாலி திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் என்பதை மறுப்பது தர்மமல்ல.

ஆட்சியில் சேர்ந்து ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு நல்கி தமது மக்களின் பாதுகாப்பும் முன்னேற்றமும் உறுதிப்படுத்தவேண்டுமென்ற நோக்கமே அவர் அமைச்சர் பதவிக்கு உடன்பட்டதின் ரகசியம்

கிராமிய தொழில் துறை அபிவிருத்தியில் அவர் ஆற்றிய பணி கணிசமானது. அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றம் சிறப்பாக பாதுகாப்பு விடயத்திலே! கெட்ட குடியே கெடுமென்ற கதி மலையக மக்களின் கதியாய்விட்டது.

இந்திய வம்சாவளியினரென்றால் என்ன, இலங்கைத் தமிழர் என்றால் என்ன, இன்றைய கலவரத் தலைவர்களுக்கு வேண்டியிருந்தது தமிழன் உயிரே; உடைமையைக் கொள்ளையடிப்பதும், வீடுகளுக்கு தொழில்நிலையங்களுக்கு கொள்ளி வைப்பதும் இரண்டாவது, மூன்றாவது இடம் வகித்தன.

இந்த நிலையில் அமைச்சர் தொண்டமான், அமைச்சர் பதவியைத் துறப்பதைக் காட்டிலும், தம் மக்களின் பாதுகாப்புப் பேரில் இந்திய அரசின், தமிழக மக்களின் உதவியை நாடுவது அவசியமாயிற்று; ஆனால் இலங்கை அரசின் அமைச்சரென்ற அடிப்படையில், நாவடக்கத்துடன் பேசவும், அதேசமயம் காரியத்தில் கண்ணுயிருக்கவும் உறுதி கொண்ட திரு. தொண்டமான் இந்தியப் பிரதமருக்கு இங்கு நடைபெற்ற சம்பவங்களையும் நாட்டின் உண்மைநிலையையும் எக்காரணம்கொண்டும்மறைத்திருக்கமாட்டார்.

தமிழகத் தலைவர்களுடனும் மக்களுடனும் அளவளாவிய இலங்கை அமைச்சர் அங்கு ஆவேசத்துடன் பேசிய மக்களின் கேலிப் பிரவாகத்தில் தமது சாதுர்யத்தைப் பறிகொடுக்கவில்லையென்று தெரிகிறது.

''சன்டே சில்; மன்டே கில்'' என்று இலங்கையின் வன்செயல்கள் வர்ணிக்கப்பட்டாலும்— அந்த உண்மையை நிராகரிக்காது— அதேசமயம் சிங்கள சமூகத்தில் பல பெரியவர்கள் உண்டென்று விளக்கமளித்து பழிபேசுவதில் பயன்காணுது, இன்றைய தமிழர் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னை அல்ல; சர்வதேசப் பிரச்னை; அதற்கு சமாதான தீர்வு காண இலங்கை ஜனாதிபதி நடவடிக்கையில் விரையவேண்டுமென்று பகிரங்க கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இனிமேல் நாட்டின் தமிழர்கள் அனைவரின் பாராளுமன்ற பிரதிநிதி அமைச்சர் தொண்டமானே என்று திரு. அமிர்தலிங்கம் கூறியிருப்பதும் எதனைக் குறிக்கிறதென்பது தெளிவு.

## பிஷப் லக்ஷ்மன் விக்கிரமசிங்கி

''இப்புவியின் மீதினிலே
உப்பெனவே நீரிருக்க
எப்பொழுதும் காரம்
இருக்க—காரம்
எப்பொழுது போகிறதோ
அப்பொழுதே
கெட்டுவிடும்
முப்பொழுதும் எண்ணி
நடக்க''

இவ்வாறு மக்களுக்கு உபதேசித்த இயேசுநாதரின் கணிப்புக்கமைய, பூமியின் உப்பாக வாழ்ந்தவர் மறைந்த பிஷப் லக்ஷ்மன் விக்கிரமசிங்கி.

பல்கலைக் கழகங்களின் உயர் கல்வியில் முதன்மை பெற்றோர், அறிவியலையும் அருளியலையும் ஒன்று பிணைத்து குடும்பத்துக்கொருவராதல் கிறிஸ்துவ திருச்சபைக்குதம்சேவையை அர்ப்பணிப்பது ஆங்கிலப் பெருங்குலத்தோரின் மரபு. இதனையே லக்ஷ்மனின் தந்தையார் சிவில் சேவிஸ் உயர் உத்தியோகத்தர் பின்பற்றினார்.

அங்கிளிக்கன் திருச்சபையில் தலைமை பெற்று குருநாகல் ஆயராக 22 வருடம் அரும்பணி புரிந்த பிஷப் அவர்கள் சர்வதேச மனித உரிமை இயக்கத்தின் ஒரு பெரும் இலங்கைத் தூண்; நாட்டின் அபிவிருத்தி, பொருளாதாரம், அரசியல், சமூக சீர்திருத்த இயக்கங்களில் தன்னலமற்ற சேவை செய்த ஆற்றல் நிறைந்த தியாகி. கொள்கை உறுதி படைத்த அஞ்சா நெஞ்சன்.

யாழ்ப்பாணத்துமக்களின் உள்ளத்தைக் கவர்ந்த ரகசியம், இங்கு நடைபெற்ற கலவரங்களில் அவர்கொண்டிருந்த பெருங்கவலை.

பிஷப் அவர்கள் அசாதாரண சிந்தனையாளர்; உண்மைத்துறவி; இருப்பினும் இந்நாட்டு மக்கள் இனக்குரோதமின்றி வாழ முடியவில்லையே என்றும், எத்தனையோ கொடுமைகளுக்கு தமிழ் மக்கள் திரும்பத் திரும்ப பலியாகின்றாரே என்றும் அவர் கொண்ட மனக்கவலை அவருடைய இருதய நோய்க்கும் குறுகிய வாழ்வுக்கும் நிச்சயம் ஒரு காரணமெனலாம்.

1931ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீய சம்பவங்களில், பொதுஜன நூல் நிலையம் எரிக்கப்பட்டதைப் பொறுக்க முடியாது இங்கு வந்து நேரில் விசாரணை செய்து, ஒரு நீண்ட மகஜரை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து தமிழ் மக்களுக்காக வாதாடினராம்.

பிஷப் லக்ஷ்மன் போன்ற தியாகச்சுடர்கள் சடுதியில் அணைந்து போவது நாட்டின் இன்றைய நிலைக்கு ஈடுகொடுக்க முடியாத பேரிழப்பு.

# இலங்கைத் தமிழரின் இன்னல்தீர இறைஞ்சுவோம்

தருமையாதீனத்தின் மாதவெளியீடான 'ஞான சம்பந்தம்' கடந்த நாற்பத்து இரண்டு ஆண்டுகளாக தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆடித் திங்கள் இதழில் வெளியான இக்கட்டுரை இங்குமறுபிரசுரம் செய்யப்படுகிறது.

இந்த நூற்றாண்டில் இதுவரை வரலாறு காணாத இனக் கொலைகள் இலங்கையில் நடந்துள்ளன. இராணுவத்தினரின் உதவியுடன் சிங்கள வெறியர்கள் மொழி உணர்வாலும், இன உணர்வாலும் உந்தப்பட்டுக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடனும் தமிழர்களை அழித்தொழிக்கும் எண்ணத்துடனும் பல்லாயிரம் இந்திய வம்சாவளியினரையும், மண்ணின் மைந்தர்களாகிய தமிழர்களையும் கொன்றுகுவித்துள்ளனர். தமிழ் வணிகர்களின் கடைகளிலும் வீடுகளிலும் புகுந்து பலகோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களைக் கவர்ந்துள்ளனர். வன்முறைச் செயல்களை நிகழ்த்தியுள்ளனர். எங்கு பார்த்தாலும் கொலை, வன்முறை, கற்பழிப்பு, சூறையாடல் முதலிய கலவரங்களைச் செய்து வெறியாட்டம் ஆடியுள்ளனர் லட்சக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியுள்ளனர்.

இந்தத்துயரச் செய்திகள் உலக மக்கள் பலருடைய உள்ளங்களையும் நெகிழவைத்துள்ளன. குறிப்பாகத் தமிழ் மக்களின் நெஞ்சங்களை உலுக்கியுள்ளன. இலங்கைக் கலவரத்தின் எதிரொலியால் தமிழக மக்கள் அந்நாட்டு அரசின் போக்கைக் கண்டித்துக் குரல் எழுப்பி வருகின்றனர்.

தமிழக அரசு இலங்கை அரசின் போக்கைக் கண்டித்து இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை வற்புறுத்திவருகிறது.

இந்திய அரசு, இது அயல் நாட்டின் உள்விவகாரம் ஆனதால் அதில் நாம் தலையிடுதல் கூடாது என்ற கருத்தில் தீவிரமாக எதையும்செய்ய இயலாமல் இயன்ற நடவடிக்கைகள் பலவற்றை அவ்வப்போது மேற்கொண்டுவருகிறது.

எப்படியிருந்தாலும் அண்டை நாட்டில் நம் இன மக்களாகிய தமிழ்மக்கள் துயருறுவதை, துன்புறுத்தப்படுவதைப் பொறுக்கமுடியாமல் நம்மால் இயன்ற துயர்துடைப்புப் பணிகள் பலவற்றை நாமும் மேற்கொண்டுதான் வருகிறோம்.

### ஈழத்தமிழர்

இந்திய நாட்டுக்கும், இலங்கைக்கும் பல்லாயிரம் ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு உண்டு. இந்திய நாட்டைத் தாய்நாடு என்றும், இலங்கையைச் சேய் நாடு என்றும் கூறுவர். இவ்விரு நாடுகளையும் இணைக்கும புராண வரலாறுகளும் இலக்கியங்களும் எண்ணற்றவை உண்டு. இக்கரை மறைந்தால் அக்கரை தெரியுமென்ற அளவிற்கு அண்மையிலுள்ள இந்நாட்டில் தமிழின மக்கள் பல்லாயிரவர் அந்நாட்டை வளப்படுத்தி வாழ்ந்துவரலாயினர். இலங்கையில் தமிழகத்தை அடுத்துள்ள யாழ்ப்பாணப்பகுதியில் மிகுதியாக வாழ்ந்துவரும் தமிழர்கள் தமிழக ஊர்களின் பெயர்களையும் தங்கள் வாழ்விடங்களுக்குச்சூட்டி அந்நாட்டில் உரிமையுடன் வாழ முற்பட்டனர்.

தமிழ்நாட்டைப் பின்பற்றிக் கோயில்கள் அமைத்தும், மொழிப்பற்றுடன் சமயகலாசாரங்களைப் பேணியும் தனி இனமாக வளர்ந்து வரலாயினர். தமிழகத்தில் இருத்தல் போலத் தேவாரப்பாடல் பெற்ற திருக்கேதீச்சரம், திருகோணமலை ஆகிய இரு தலங்களை இலங்கை பெற்று இந்து சமயம் விளங்கும் நாடாகத் திகழும் நிலை எய்திற்று.

ஈழத்தமிழர் தங்கள் உடலுழைப்பாலும் அறிவின் முன்னேற்றத்தாலும் இலங்கையில் வாழ்ந்து அந்நாட்டு மேம்பாட்டுக்குப் பல வழிகளில் உதவினர்.

### இனஉணர்வும் மொழிவெறியும்

ஆங்கிலேயர் ஆட்சிக்குப்பின் இலங்கை தன்னுரிமை பெற்றது. இலங்கையின் பூர்வீகக்குடிகள் என்று சொல்லிக்கொள்ளும் சிங்களவர்கள் பெரும்பான்மை பலத்தால் ஆட்சிபீடங்களைக் கைப்பற்றினர். இன உணர்வு வளர்ந்தது. மொழிவெறி தலைதூக்கிற்று.

தங்கள் நாட்டு முன்னேற்றத்துக்குப் பல்லாற்றானும் உதவிய தமிழர்கள் மீது அவர்கள் பொறாமை கொள்ளத் தொடங்கினர்.

தமிழர்களுக்கு அநீதிகள் இழைக்கத் தொடங்கினர். பள்ளி கல்லூரிகளில் மாணவர்களின் கல்வி முன்னேற்றம், வேலைவாய்ப்புப் போன்றவற்றில் வேறுபாடுகளைக் காட்டித் தமிழர் முன்னேற்றத்தைத் தடைசெய்ய முற்பட்டனர்.

ஈழத்தமிழர்களில் கல்வித் தகுதி பெற்றோர்க்கு சொந்த நாட்டில் வேலைவாய்ப்புகளுக்கு இடமில்லாமல் வேறுநாடுகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.

குடியுரிமை பெற்ற தமிழர்கள் அரசோடு அடிக்கடி போராடித் தங்கள் உரிமைகளைப் பெறும் நிலை உண்டாயிற்று. அதனால் ஈழத்துத்தமிழர்கள் தங்களுக்குத் தனிநாடு கேட்கும் நிலைக்குத்தள்ளப்பட்டனர். ஈழத் தமிழ் நாடு கிளர்ச்சி உருவாயிற்று. அரசியல் புரட்சிகள் இனக்கலவரங்கள் ஆங்காங்கே தோன்றின. சென்ற முப்பது ஆண்டுகளில் தான் சிங்களவர்களால் தமிழர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் மிகுதியாயிற்று அவ்வப்போது சிங்களவர் தமிழர் வீடுகளை எரித்தும் உடைமைகளை நாசப்படுத்தியும் சேதங்கள் விளைவிக்கத் தொடங்கினர். சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய நூலகம் ஒன்றைக் கொளுத்தினர் என்பதைக் குறிப்பிடலாம்.

### இலங்கை அரசு நீதிதவறியது

சிறுபான்மையினர்க்குப் பாதுகாப்புத்தர இலங்கை அரசு முறைதவறிய காரணத்தால் ஈழத்தமிழர் வேதனையுற்றனர் சிலர் புலிப்படை என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டு அரசைக் கைப்பற்றவும் முயன்றனர் பலர் தமிழர் உரிமைகளைக்கோரி அமைதியாக அவ்வப்போது புரட்சிகள் செய்து வந்தனர். சிங்களவர்களின் வன்முறை மேலும் அதிகமாகிச் சென்ற திங்கள் இறுதியில் பல்லாயிரம் தமிழர்களைப் பலிவாங்கத் தொடங்கிற்று. சிங்களவெறியர்கள் கொழும்புப்பகுதியில் தமிழர்களைத் தாக்கிக் கொன்று தமிழர்கடைகளையும் வீடுகளையும் சூறையாடியும் காட்டுமிராண்டித்தனமான செயல்களைப் புரிந்து தீராப்பழிகளைத் தேடிக் கொண்டுள்ளனர்.

குடியுரிமைபெற்று அந்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு வழங்கவேண்டிய உரிமைகளை வழங்காமல் அரசு அவர்களை அநாகரிகமாக அழித்தொழிக்க முற்பட்டுள்ளது.

தமிழர் சிங்களவரிடையே ஒற்றுமையை வளர்த்துத் தங்கள் நாட்டை வளப்படுத்த வேண்டிய அரசு இனவெறிக்குத் தூபம் இடுவதும் இராணுவத்தினரைக் கட்டவிழ்த்துவிட்டு விருப்பம்போல் வெறியாட்டம் ஆடவிட்டு வேடிக்கை பார்ப்பதும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

இந்த நூற்றாண்டில் கண்ணெதிரே நிகழும் இந்த அநாகரிகச் செயல்களைப் பொறுக்க முடியாமல் தமிழக மக்கள் கொதிப்படைத்து உள்ளனர்.

இலங்கையரசு தமிழ் மக்களுக்கும் சிங்களவர்களுக்கு அளிக்கும் எல்லா உரிமைகளையும் அளித்து அவர்கட்குப் பாதுகாப்பு அளிக்க முற்பட்டாலொழிய இலங்கையில் அமைதி நிலவாது ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் போன்ற உலக நிறுவனம் உடனடியாகச் சமாதானப்படையை அனுப்பித் தமிழர்களுக்குப் பாதுகாப்பளிக்க முன்வர வேண்டும்.

சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புத்தர வேண்டிய அரசு அவர்களைக் கொன்று பழிதீர்க்க நினைப்பது அறமாகாது. என்பதை அவ்வரசுக்கு வற்புறுத்துகின்றோம். இலங்கை அரசும் சிங்களவரும் நல்ல புத்தியுடன் நன்னெறி கடைப்பிடிக்கவும் இலங்கைத் தமிழர் இன்னல்கள் தீரவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோம்.

—நன்றி ஞானசம்பந்தம்

## குருநாகல்பிஷப்விக்கிரமசிங்க காலமானர்

(கொழும்பு)

குருநாகல் அத்தியட்சாதீனப் பேராயார் அதிவண லக்ஷ்மன் விக்கிரமசிங்கா ஆண்டகை நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானர். இறக்கும்போது இவருக்கு 56 வயதாகும்.

இவர் குருநாகல் மேற்றிராணியாராகப் பதவியேற்கமுன்னர், பல்கலைக்கழக கிறிஸ்தவ ஆலய பொறுப்பாளராக இருந்தார். இவர் குருநாகலின் இரண்டாவது மேற்றிராணியார் என்பது குறிப்பிடத்தக்கது.

தலைசிறந்த கல்விமானன இவர் சமூகசீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று கனத்தை மயானத்தில் நடைபெறவுள்ளது. (வெ)

## தையல் கண்காட்சி

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தில் இயங்கிவரும் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான தொழில் திணைக்களத்தின் தையல் பயிற்சி நிலையத்தின் தையல்கண்காட்சி எதிர்வரும் 30ம் திகதி நடைபெறவுள்ளது. கண்காட்சியை திருமதி நா. தியாகராஜா ஆரம்பித்து வைப்பார்.

# "பாதிக்கப்பட்ட ஊழியர் வேலைநீக்கம் செய்யப்பட்டால் ஐ. நா. சபையில் குரல் எழுப்பலாம்"

## இணைப்புக் குழுக் கூட்டத்தில் தகவல்

(யாழ்ப்பாணம்)

"பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக வந்த ஊழியர்களை அரசாங்கம் வேலை நீக்கம் செய்தால், அதனை ஐக்கியநாடுகள் சபைக்கு எடுத்துச்செல்ல முடியும். ஐ. நா. சபை சர்வதேச தொழில் நிறுவன குழுவில் இதுபற்றி முறையிட்டு நிவாரணம் பெறலாம். பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டால் இந்தியா அதுபற்றி ஐ. நா. சபையில் குரல் எழுப்பும் என்ற நம்பிக்கை இருக்கிறது."

க. யோகநாதன்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கூட்டத்தில்பேசிய பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுத் தலைவர் திரு. கே. ராஜசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஐ. தி. சபபந்தன் மேலும் கூறியதாவது:-

"பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு உயிரைப் பாதுகாப்பதா? உத்தியோகத்தைப் பாதுகாப்பதா? என்ற பிரச்னை எழுந்துள்ளது. நிலைமை இன்னும் சீராகவில்லை. சிங்களவர்கள் வீடுகளை தமிழருக்கு வாடகைக்கு தரப்பயப்படுகிறார்கள், வீட்டைத் தமிழர்களுக்குக் கொடுத்தால், எரித்துவிடுவார்கள் என அஞ்சுகிறார்கள். தமிழர்களுக்கு கடைகளில் சாப்பாடு கொடுக்கப் பயப்படுகிறார்கள். இந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் அங்கு சென்று அமைதியாக வேலை பார்க்க முடியுமா? பல சம்பவங்கள் ஏற்பட்டுள்ளதாக, பாராளுமன்றத்தில் கூறுகிறார்கள். அவசர காலத்தை நீடிக்கிறார்கள். நம்மைப் பழிவாங்கத்தான் வேலைக்கு வருமாறு வேண்டுகோள் விடுக்கின்றார்கள். அமைச்சரவை ஒரு முடிவெடுக்க, அதிகாரிகள் தங்கள் விருப்பம்போல் எச்சரிக்கைக் கடிதங்கள், வேலைநீக்கநோட்டீஸ்கள் அனுப்புகிறார்கள். இதற்கெல்லாம் நாம் பயந்துவிடக்கூடாது. அகதிகளாக வந்தவர்களை வேலைநீக்கம் செய்து விடமுடியாது எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, இணைப்புக்குழுவின் தீர்மானப்படி நடக்கவேண்டும்."

### 2000 காலி இடம்

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் பேசுகையில் கூறியதாவது:-

"சகல தமிழ் ஊழியர்களும் சேர்ந்து பலம் வாய்ந்த ஒரு நிரந்தர அமைப்பை ஏற்படுத்தினல், வடக்கு கிழக்கில் நிச்சயமாக, நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யமுடியும். இங்கு ஒரு போராட்டத்தை ஆரம்பித்து, வடக்கு கிழக்கில் எமது கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்யலாம்."

"இங்கு பாடசாலைகளில் சுமார் 2000 காலி இடங்கள் இருக்கின்றன. பாதக்கப்பட்ட மாணவர்கள் இங்கு சுமார் 5000 பேர் புதிதாகச் சேர்ந்துள்ளார்கள். இவர்களுக்கு 500 ஆசிரியர்கள் தேவை. அத்தியாவசிய சேவை ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோனிடம் இவற்றை எடுத்துக்கூறி, பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்களுக்கு இங்குள்ள பாடசாலைகளில் நியமனம் வழங்குமாறு கேட்டோம். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை."

"இன்று அரசு, அக்டோபர் மாதச் சம்பளத்தை இங்கு எடுக்க முடியாதென அறிவித்துள்ளது. கல்வி அமைச்சு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட ஊழியருக்கு ஆதரவாகசிபார்சு செய்திருக்கமாட்டார்கள். அதிகாரிகளின் சிபார்சைதான் அரசு ஏற்கிறது.

### உயிருக்கு என்ன உத்தரவாதம்

"கலவரத்தின்போது ஆசிரியர்கள் இம்சைப்பட்டார்கள்; துன்பப்பட்டார்கள்; துயரப்பட்டார்கள்; சித்திரவதைக்காளானார்கள். உடமைகளை இழந்து, சொத்துக்களைப்பறிகொடுத்து, அனாதைகளாக அகதிகளாக வடக்கு நோக்கி வந்துள்ளார்கள். அவர்களில் பலருக்கு இன்னும் பதட்டம் நீங்கவில்லை. அச்சம் போகவில்லை: பயம் தெளியவில்லை. இந்நிலையில் மீண்டும் பழைய இடங்களுக்குப்போகமுடியுமா? அங்கு நிம்மதியாக வேலைசெய்யமுடியுமா? என்ன பாதுகாப்பு இருக்கிறது? உயிருக்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது)

"இங்கு ஏராளமான காலியிடம் இருக்கிறது. அதனை நிரப்புவதற்கு தாராளமான மனப்பான்மை அரசு அதிகாரிகளுக்கு இல்லை. தெற்கிலுள்ள தமிழ் மாணவர் எல்லாம் இங்கு வந்துவிட்டார்கள். ஆசிரியர்கள் அங்கு போய் யாருக்கு கல்வி கற்பிப்பது? இந்த விஷயம் தெரியாதவர்கள் போல் அதிகாரிகள் செயல்படுகிறார்கள்.

## "தமிழர் பிரச்னை தீரும் வரை வேலைக்குத்திரும்பமுடியாது" — மகாசிவம்

ஆதலால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எமதுசங்கம் எடுத்த முடிவின்படி இறுதிவரை போராடவேண்டும்.

### திரும்பிப்போக விரும்பமாட்டார்கள்

இன்றுள்ள நிலையில் எந்த ஒரு ஆசிரியரும் திரும்பிப்போக விரும்பமாட்டார்கள். வடக்கு கிழக்கைத்தவிர நாட்டில்வேறு எந்த இடத்திலாவது பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அமைதியாக வேலை செய்யக்கூடிய நிலைமை இன்றுஇல்லை. தமிழர் பிரச்னை தீரும்வரை பாதிக்கப்பட்டவர்கள் வேலைக்கு திரும்ப முடியாது. இந்நாட்டில்தமிழர் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காணப்படும்வரை, வடக்கு, கிழக்கை தவிர நாட்டில்வேறு எந்த இடத்திலும் பாதிக்கப்பட்டவர்கள் வேலை பார்க்க முடியாது.

### மறைமுகமான பயமுறுத்தல்கள்

இணைப்புகுழு உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம் பேசுகையில் கூறியதாவது: "உங்களை அங்கு வேண்டாம் என்ற காரணத்தினால் தான் விரட்டி அடித்து இங்கு அனுப்பினார்கள் வீடுகளை தீயிட்டுக்கொளுத்தினார்கள் அப்படிப்பட்டவர்கள் வாழும் இடத்திற்கு மீண்டும் எப்படிப்போக முடியும்? உங்களை அங்கே வைத்திருக்க விரும்பாத ஒரு சக்தி, மீண்டும் வரும்படி வற்புறுத்துகிறது. இதுமறைமுகமான ஒரு பயமுறுத்தல. வராதுபோனால் உத்தியோகம் பறிக்கப்பட்டு விடும் எனப்பயமுறுத்துகிறார்கள்.

"துரத்தப்பட்டு, துன்பப்பட்டு, கலைக்கப்பட்டு கஷ்டப்பட்டு வந்தவர்கள் நாம் ஏன் போகாமல் இருக்கிறோம்? பாதுகாப்புபிரச்னை குறுக்கிடுகிறது. பாதுகாப்பு இருக்கிறது வாருங்கள் என்கிறார்கள் அதே நேரம் நாட்டில் அமைதியில்லை என்று கூறி அவசரகாலத்தை நீடிக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு பயமுறுத்தல் கடிதங்கள் எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பப்படுகிறது என்று கூறுகிறார்கள் இந்த நிலையில் அங்கு போய் வாழமுடியுமா? இன்னும் ஒரு பெரிய கலவரத்திற்கு தூபமிடுகிறார்கள் என்று அமைச்சர்களே சொல்கிறார்கள் இப்படியான நிலையில் அங்கு போகமுடியுமா?

### வேலைநீக்க அறிவித்தல்

"வேலைபோய்விடும் எனப் பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்புகிறார்கள். சிலருக்கு வேலைநீக்க அறிவித்தல் அனுப்புகிறார்கள். வேலைநீக்கம் செய்யப்பட்டால், அதுபற்றி ஆட்சேபித்து பதில் அளிக்க சட்டமூலம் 6மாத அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

### உயிரா? உத்தியோகமா?

"பாதிக்கப்பட்ட ஊழியருக்கு இருவித பயம் ஏற்பட்டுள்ளது. இங்கிருந்தால் உத்தியோகம் போய்விடும் என்று பயப்படுகிறார்கள். அங்கு வேலைக்குப்போனால் உயிர் போய்விடும் என்று அஞ்சுகிறார்கள். உயிரா? உத்தியோகமா? வேண்டும். உத்தியோகம் போனால் உயிருடனாவது இங்குவாழமுடியும். ஆனால் உயிர் போய்விட்டால் அதனுடன் உத்தியோகமும் போய்விடும்."

ஆசிரியர் சிவராசா பேசுகையில் கூறியதாவது: இன்றுள்ள நிலைமையில் மீண்டும் அங்கு போய் நிம்மதியாக வேலை செய்யமுடியாது. நாட்டில் அமைதி இன்னும் ஏற்படவில்லை என்று அரசாங்கமே கூறுகிறது. தனியார் பாடசாலை ஆசிரியர்களை பொறுத்தமட்டில் அவர்கள் நிலைமை பற்றி அத்தியாவசியசேவை ஆணையாளரிடம் விரிவாக எடுத்துக்கூறி சில கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளோம். அதுநிறைவேறும்வரை காத்திருப்போம்.

"நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டதாக கூறுகிறார்கள். நமது நிலைமையை பல சிங்களவர்களிடம்கேட்டோம். நாங்கள் உவ்விடம் வந்தால் எப்படியிருக்கும்? என்று கேட்டோம். பாதுகாப்பு அளிப்பீர்களா? என்றும் கேட்டோம். எங்களால் எப்படி பாதுகாப்பு அளிப்பதாக உறுதிகூறமுடியும் என்று அவர்கள் சொன்னார்கள். இந்தநிலையில் மீண்டும் எப்படிச் செல்லமுடியும். இணைப்புக்குழு திட்டவட்டமாக முடிவை அறிவிருத்திருக்கிறது. ஆதலால் எல்லோரும், இணைப்புக்குழு முடிவின்படி செயல்படவேண்டும். அப்பொழுதுதான் எங்கள் கோரிக்கை நிறைவேறும்.

இடம்பெயர்ந்தவர்களின் பிரச்னையை சுமுகமானமுறையில் தீர்த்துவைக்க, இணைப்புக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது பாதிக்கப்பட்டவர்களுக்கு செப்டம்பர் 15ம்தேதி வரை விசேட லீவு வழங்கப்பட்டது. அவர்கள் தொடர்ந்து லீவில் நின்றார்கள். பின்விடுமுறை வந்தது. அக்டோபர் 13ம் தேதிவரை இது நீடிக்கப்பட்டது. கடைசி நேரத்தில் தான், வானொலிமூலம் பழைய இடங்களுக்கு செல்லுமாறு தகவல் வந்தது. அமைச்சு அதிகாரிகள் சில தினங்களுக்கு முன், அல்லது ஒருவாரத்திற்கு முன் இதனை அறிவித்திருக்க முடியாதா? பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும், மேலும் கஷ்டங்களைக் கொடுப்பதில்தான் அக்கறை காட்டுகிறார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)


VACANCIES

கீழ்க்காணும் துறைகளில் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

1. Welders ஒட்டுனர்
2. Fitters பொருத்துனர்
3. Tinkers உலோக வேலையாளர்


Promoters Engineering Company Ltd.
844, POINT PEDRO ROAD,
NALLUR, JAFFNA. (9520)


கடந்த யூலை கலவரத்தில் களுத்துறையில் காடையர்களால் தாக்கப்பட்டு அகால மரணமடைந்த

சிவசுப்பிரமணியம் சிவநாதன்

அவர்களது

## நினைவஞ்சலி



மலர்வு: 20-5-1954

உதிர்வு: 25-7-1983

குடும்பத்தில் மூத்த மலர் குணத்தினிலே பூத்த மலர் சகதியாய்க் கலவரத்தில் சாய்ந்த மலர் இந்த மலர் உதவிசெய்ய எப்போதும் ஓடிவரும் உண்மை மலர் திருமணத்தைக் காண முன்னே சென்றுவிட்ட திந்த மலர், மலர் உதிர்ந்து வீழ்ந்த தனால் வாடுகிறோம். எம்மலரே? இறைவன் திருப்பாதம் எய்துக என்றிறைஞ்சுகிறோம்.

பெற்றோர், சகோதரர்கள்,

மைத்துனர், உறவினர்கள்.

வேலணை மேற்கு. 9516

# இனக்கொலைக்குக் காரணமானவரைத் தண்டிக்க வேண்டும்

## தி. மு. கழகத்தின் ஐ. நா. மனு

(நியூயோர்க்)

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து ஐ.நா.வில் தி.மு.கழகம் சமர்ப்பித்த மனுவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் பிரசுரமானது. இரண்டாவது தொகுதி இன்று வெளிவருகிறது.

''1956-ம் ஆண்டிலிருந்து நடைபெற்ற இனக்கலவரங்களின் மூலம், திட்டமிட்ட இனப்படுகொலையே நடைபெற்றிருக்கிறது என்பதை உணரலாம். பெருமளவில் நடைபெற்ற இனக்கலவரங்களை மட்டும் கீழே தந்துள்ளோம்.

### 1956

1956-ம் ஆண்டு ஆட்சி மொழிச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பும், நிறைவேற்றப்பட்ட பிறகும் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் வெடித்துக் கிளம்பின. சிங்களப் பகுதிகளில் ஏராளமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான தமிழர்கள் வீடுவாசல்களை இழக்க நேர்ந்தது. ஆனால் சிங்களப் பொலிசோ கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

### 1958

1958-ம் ஆண்டு மே, ஜூன் திங்களில் தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் மீண்டும் வெடித்துக் கிளம்பின. கொலை கொள்ளை, தீ வைப்பு, கற்பழிப்பு சம்பவங்கள் நடைபெற்றன.

### 1961

சிங்களம் ஆட்சி மொழியாக தங்கள்மீது திணிக்கப்படுவதைக் கண்டித்து அறவழியில் சத்தியாக்கிரகம் செய்த தமிழர்கள்மீது இராணுவமும் பொலிசும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர். தமிழர் வாழும் பகுதிகளில் பல மாதக் கணக்கில் இராணுவம் முகாமிட்டு ஆதிக்கம் செலுத்தியது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பேரில் நூற்றுக்கணக்காணோர் காரணம் எதுவும் காட்டப்படாமலே கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டனர். இந்தக் கொடிய சம்பவங்களின் விளைவாக சர்வதேச ஜூரிஸ்ட் கமிஷன் தமிழ் சிறுபான்மையினரின் நிலைகுறித்து அறிக்கை ஒன்று வெளியிட்டது.

### 1966

டட்லி சேனநாயக்கா பிரதமராக இருந்தபோது திருமதி. பண்டாரநாயக்காவின் தலைமையில் எதிர்க்கட்சிகள் தமிழர்களுக்கு எதிராக கலவரங்களைத் தூண்டிவிட்டதோடு, தாங்களே முன்னின்றும் நடத்தினர்.

### 1972-77

தமிழர் வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகள் முற்றிலும் இராணுவ ஆட்சியின்கீழ் வைக்கப்பட்டிருந்த காலகட்டம் இது. காரணம் காட்டாமல் கைது செய்தல், சித்திரவதை, கொள்ளையடித்தல் போன்ற கொடிய செயல்களை இராணுவமும் பொலிசும் செய்தன. 1974-ம் ஆண்டு ஜனவரி 10-ம் நாளன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4-ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் அப்பாவித் தமிழர்களை பொலிசார் தாக்கினர்.

புத்தளம் மசூதியில் இஸ்லாமிய தமிழர்மீது பொலிசார் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் ஏராளமானோர் இறந்தனர். இலங்கை முழுவதும் பரவலாக இஸ்லாமிய தமிழர்கள் தாக்கப்பட்டனர். ஆனால் அந்த வன்முறை சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த இலங்கை அரசு மறுத்துவிட்டது.

### 1977

1977-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் படுமோசமான வன்முறையை தமிழர்கள் சந்திக்க நேர்ந்தது. 1977 ஜூலைத் திங்களில் இலங்கையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தனித் தமிழ் ஈழக்கோரிக்கை முன்வைத்து, தமிழர்கள் வெற்றிபெற்றனர். தமிழர்களுக்கு எதிராக கலவரம்கிளம்பியது அரசு ஆதரவாளர்கள் இந்த வன்முறைசம்பவங்களில் பங்கேற்றனர். ஆகஸ்ட் 18-ம் திகதி அப்போது பிரதமராக இருந்த ஜயவர்த்தன நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பினார். ஜயவர்த்தனவின் அந்தப் போர்ப்பிரகடனப் பேச்சு அரைமணி நேரத்துக்கு ஒருமுறை இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. ஜயவர்த்தன இந்தப் போர்ப் பிரகடனம் செய்த மறுநாளே அதாவது ஆகஸ்ட் 19-ம் நாளன்று இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக வன்முறை வெடித்தது.

1977-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களைக்கூட சிங்களவர்கள் விட்டு வைக்கவில்லை. அவர்களது வீடுகளை சிங்களவர்கள் தீவைத்துக்கொளுத்தினர். தமிழர் பெண்களை கும்பல் கும்பலாகக் கூடி கற்பழித்தனர். அவர்களது உடைமைகளைச் சூறையாடினர். நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இரண்டு லட்சம் தோட்டத்தொழிலாளர்கள் ஈழத் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு பாதுகாப்புத் தேடிச்சென்றனர். 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் அகதிகளாகவும் அனாதைகளாகவும் மாறினர். ஏறத்தாள தமிழர்களின் நூறு கோவில்கள் அழிக்கப்பட்டன. பல கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள தமிழர்களின் உடைமைகள் நாசமாக்கப்பட்டன. இந்த வன்முறைச் சம்பவங்களில் இராணுவமும் பங்கேற்றது. தென்பகுதியில் இராணுவத்தின் தூண்டுதலால் தமிழர்கள் மீது சிங்களவர்கள் தாக்குதல் தொடுத்தனர். வட பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும், இராணுவமே முன்னின்று தாக்குதலை நடத்தியது. தமிழர்கள் வாழும் பகுதிகளில் முக்கிய நகரங்கள் அனைத்தும் தாக்கப்பட்டன. இலங்கை முழுவதும் வன்முறையைத் தூண்டிவி_ பொலிசார் தங்கள் வயர்லஸ் சாதனங்களைப் பயன்படுத்தினர். பரம்பரை பரம்ரையாக வாழும் தமிழர்களுக்கு முற்றிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

### 1979

1979 ஜூலை 11ம் நாளன்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன வடபகுதி இராணுவ கமாண்டருக்கு. ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். ''வட பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பயங்கரவாதத்தை முற்றிலும் பூண்டோடு வேரறுப்பது உமது கடமை; டிசம்பர் 31ம் தேதிக்குள் இதனை நீ செய்துமுடித்தாகவேண்டும்'' என்று அந்த கமாண்டருக்கு ஜெயவர்த்தன ஆணைபிறப்பித்தார். பிறகு, நெருக்கடிநிலை அமுல்படுத்தப்பட்டு இறந்து போனவர்களின் சடலங்கள் விசாரணையின்றி அப்புறப்படுத்த இராணுவத்திற்கும், போலிசுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்கள் அநியாயமாகக் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் மூவர் மாண்டனர்; மற்றும் மூவர் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை. அங்கு இராணுவ சித்திரவதை முகாம் ஒன்று நிறுவப்பட்டது. நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். அப்பாவிகளான அவர்கள் பல மாதங்களுக்குப் பிறகே விடுதலை செய்யப்பட்டனர்.

### 1981

1981ம் ஆண்டிலிருந்து இனப்படுகொலை தொடங்கியது. ஆயுதம்தாங்கிய பொலிசும், இராணுவமும் ஏராளமான தமிழர்களைக் கைதுசெய்து அவர்களது குடும்பத்தார் முன்னிலையிலேயே அடித்து நொறுக்கியது. பின்பு அவர்கள் இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று, தாங்கொணு சித்திரவதை செய்யப்பட்டனர். 1981 மே, ஜூன் மாதங்களிலும், ஆகஸ்ட்டிலும் நடைபெற்ற கலவரங்கள் திட்டமிடப்பட்டு அமைச்சர்களாலும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தலைமையேற்று நடத்தப்பட்டன.

1981ம் ஆண்டு மே 31ம் நாள் தேர்தல் பொதுக்கூட்டம் ஒன்றில் பொலிசாரை அடையாளம் தெரியாத சிலர் துப்பாக்கியால் சுட்டதைக் காரணமாகக் கொண்டு பொலிசார் வெறித்தனமான அழிவு செயலில் ஈடுபட்டனர் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியையே தீவைத்துக் கொளுத்தினர். யாழ்ப்பாணத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லமும் தீவைத்துக்கொளுத்தப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகமும் தீக்கிரையாயிற்று. இந்து கோவில் ஒன்றை பொலிசார் இடித்துத் தகர்த்து தீயிட்டுக் கொளுத்தினர். தெருவில் நடமாடிய அப்பாவித் தமிழர்கள் எல்லாம் தாக்கப்பட்டனர். இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் அமைச்சரவை செயலாளரையும், உள்துறை பாதுகாப்பு அமைச்சரின் செயலாளரையும் கலவரப் பகுதிக்கு நேரில் சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவருமாறு ஜனாதிபதி அனுப்பி வைத்த பிறகே பொலிசாரின் கோபம் தணிந்தது. ஆனால் தமிழர்களின் வரலாறு, கலாச்சாரம் குறித்த விலைமதிப்பற்ற ஆவணங்கள் நிரம்பிய யாழ்ப்பாணம் பொது நூலகத்தை ஜூன் முதல்நாளன்று இரவு சிங்களப் பொலிஸ் தீவைத்துக் கொளுத்தி நாசமாக்கியது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற நாளன்று அமைச்சர்களும், அரசின் உயர்அதிகாரிகளும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருந்தனர், எனவே இந்தத் தீ வைப்புச் சம்பவம் திட்டமிட்டு நடத்தியது என்ற முடிவிற்கு வரத்தோன்றுகிறது.

தமிழர்களின் கலாச்சாரத்தை அழிக்கின்ற கொடிய முயற்சி இது! அப்பகுதியிலிருந்து வெளியான ஒரே தமிழ் ஏட்டின் அலுவலகத்தையும் சிங்களவர்கள் அழித்தனர். இதன் மூலம் தெரிவது என்னவென்றால் ஏதோ திடீரென கோபத்தால் நடைபெற்ற செயல்களல்ல இவை; திட்டமிட்டு நடத்தப்பட்டவையே இவை. யாழ்ப்பாணம் பொது நூலகத்தை பொலிசாரே தீவைத்துக் கொளுத்தினர் என்பதை இலங்கையின் மூத்த அமைச்சர் ஒருவரே நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

(தொடரும்)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.

6-02 'லஸி' நாயொன்றின் தீரச் செயல்கள் (ஆங்கிலம்)

6-30 'கலைஅரங்கம்'

7-00 செய்திகள் (தமிழ்)

7-14 நாளைய நிகழ்ச்சிகள்

7-15 விளையாட்டுப்பயிற்சி

7-30 தகவல் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

8-15 செய்திகள் (சிங்களம்)

8-30 குறுந்திரைப்படம் (சிங்களம்)

9-00 இசைநிகழ்ச்சி(ஆங்கிலம்)

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

9-50 'ஹவாய்-5 ஓ' -துப்பறியும் தொடர் சித்திரம் (ஆங்கிலம்)

10-40 நிகழ்ச்சிகள் முடிவு.

## இலவச பரிசோதனை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் தமது பகுதியிலுள்ள செவிப்புலனற்ற பாடசாலை மாணவர்களுக்கு இலவச பரிசோதனை நடாத்தி காதுகேட்கும் கருவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

மேற்படி பரிசோதனையில் கலந்துகொள்ள விரும்பும்பாடசாலை மாணவ, மாணவிகள் இது விடயமாக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் எஸ்.நாகநாதர், செவிப்புலனற்றோர் உப குழுத்தலைவர் சட்டத்தரணி திரு சி.சிவபாக்கியநாதன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமது தமது பெயரைப் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

MORNING DAY CLASSES. A/L 84/85

SCIENCE ACADEMY யில்

ஆரம்பமாகின்றன

05 - 11 - 83ன் பின்னர்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சகல ஆசிரியர்களும் சித்தியை உறுதிப்படுத்தும் பிரபல்யமான பட்டதாரிகள்

தூயபிரயோக கணிதம்:
திரு. வெக்டர்

பௌதிகம்:
திரு. மணியம் - சிறீதரன் - சுந்தரமூர்த்தி

இரசாயனம்:
திரு. தில்லைநாதன்

தாவரவியல்:
திரு. சிவவீரசிங்கம், திரு. சர்வானந்தா

விலங்கியல்:
திரு. தம்பிராஜா, திரு. ஈசன்.

மாணவர்கள் நலன்கருதி திரு. மணியம் வெளிநாட்டுப்பயணத்தை ரத்துசெய்துள்ளார்.

SCIENCE ACADEMY

310, Clock Tower Rd. Jaffna

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

இதுவே கடைசி வாரம்
**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

100வது நாளைத் தாண்டி
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ்
**துணை**
(கலர்)

**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
சகலகலா வல்லவன்

கடைசி வாரமாகவும், பார்க்காதவர்களுக்கு இது ஒரு கடைசி சந்தர்ப்பமாகவும் காட்சியளிக்கிறது.
**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
Dogs of War
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO ETERNITY

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE" in
Operation Thunderbolt
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.
Passess Concessions suspended.

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
இன்று மட்டும்
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
நானும் ஒரு பெண்
(புதிய பிரதி)
விரைவில்
சரத்பாபு - சுமணலதா
திசை மாறிய பறவைகள்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
விடியும்வரை காத்திரு

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4.45
36th CHAMBER OF SHAOLIN


# தமிழ்ஈழம் கோரிக்கையை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சட்டவிரோதமாக அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பவர்களையும் சட்டவிரோதமான குடியேற்றங்களையும் அகற்றுவதற்கான சட்டம் இயற்ற இலங்கை அரசு ஏற்பாடுகள் செய்தது. இலங்கை அமைச்சரவைக் கூட்டத்தில் இதை நான் கடுமையாக எதிர்த்ததைத் தொடர்ந்து அது கைவிடப்பட்டுவிட்டது. அந்தச் சட்டம் இயற்றப்படுமானால் எப்படி எப்படி எல்லாம் இந்தியரான தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று விளக்கி அறிக்கை ஒன்றை தயாரித்து இலங்கை அமைச்சரவைக்கூட்டத்தில் தாக்கல்செய்தேன்.

இந்திய தமிழருக்கு விரோதமான அந்தசட்டத்தைஇயற்ற ஏற்பாடுகள் செய்தவர் காணி அபிவிருத்தி அமைச்சரான திரு. காமினி திசநாயகாவே.

இந்தச் சட்டம் காணி அபிவிருத்திஇலாகா அமைச்சருக்கு மிக விரிவான அதிகாரங்கள் அளிக்கக்கூடியது. விசாரணையின்றி யாரையும் 18 மாத காலம் காவலில் வைக்க அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் அளிக்கும் பயங்கரவாத தடுப்புச்சட்டம் போன்றதேயாகும். எந்த ஒரு கட்டிடத்தையும் சட்ட அனுமதியின்றி இடித்துத்தள்ளி தகர்க்கும்படி பொலிஸ், ராணுவம், அல்லது கடற்படைக்கு அரசாங்க அதிபர்கள் அல்லது உதவி அரசாங்க அதிபர் உத்தரவிட வகைசெய்வதாகும் உத்தேச சட்டம்.

## சதித்திட்டம்

இலங்கையில் வகுப்புக் கலவரத்தைத் தொடர்ந்து உயிர் தப்பி ஏராளமான தோட்டத் தொழிலாளர் தேயிலைத் தோட்டங்களைவிட்டு வெளியேறி பல இடங்களில் புனர்வாழ்வு வசதி பெற்றிருக்கிறார்கள்,

இப்படி புனர்வாழ்வு வசதி பெற்றிருக்கும் இந்தியரை அவர்கள் இப்போது வசிக்கும் இடங்களை விட்டு வெளியேற்றவும் அவர்கள் தங்கியுள்ள வீடுகளை இடித்துத்தள்ளி அவர்களை மீண்டும் நடுத்தெருவில் விரட்டவும் திரு. திஸநாயகா வகுத்த ஒரு சதித்திட்டமே இது. இப்படிச் செய்தால் இந்தியத் தமிழர்கள் இந்தியாவுக்கே ஓட்டம் எடுத்துவிடுவார்கள் என்பது அவரது கணிப்பு. இந்தசட்டம் சம்பந்தமான யோசனையை அமைச்சரவை முன்பு சமர்ப்பித்த அவர் இந்த யோசனை சட்டமாகிவிட்டது என்றே கருதத் தொடங்கிவிட்டார். அவர் இப்படி கருதியதோடு மட்டுமல்ல எல்லா அரசாங்க தோட்டத் தொழிலாளரின் புதிய குடியிருப்புக்களையும் இடித்து தரைமட்டமாக்கும்படி உத்தரவும் பிறப்பித்துவிட்டார்.

## கருணாநிதியின் கூற்று...

மத்திய மாகாணத்தில் வாழும் இந்திய தமிழரைப் பொறுத்தவரை சிங்களவருடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதைத்தவிர வேறு வழியே கிடையாது. தமிழரும் சிங்களவரும் இனி சமாதான சகவாழ்வு சாத்தியமே கிடையாது என்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி கூறியிருப்பது இந்தியத் தமிழரைப் பொறுத்தவரை நடைமுறை சாத்தியமே அல்ல.

நான் இலங்கைத் தமிழரின் தனிஈழம் கோரிக்கையை ஆதரிக்கிறேனா எதிர்க்கிறேனா என்ற பிரச்னைக்கே இடம் கிடையாது. இலங்கை தமிழர் கோரும் தனிஈழம் கோரிக்கையை தமிழ்நாடு அரசியல் கட்சிகள் ஆதரிப்பதை நான் வரவேற்கிறேன்.

இலங்கையில் உள்ள இந்திய தமிழர் தற்காலிக அடிப்படையில் இந்தியாவில் குடியேற இந்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றுநான் திருமதி இந்திரா காந்தியிடம் ஒரு யோசனை தெரிவித்தேன். இது பற்றி தான் ஆலோசிப்பதாக அவர் தெரிவித்தார்! இந்த திட்டத்தை தடுக்க திரு. ஜெயவர்த்தனே அரசு முயலுமானால் அதைநான் கடுமையாக எதிர்ப்பேன்.

இந்திராகாந்தியின் விசேஷ தூதுவரான திரு. ஜி. பார்த்தசாரதி கொழும்பு செல்ல இருக்கிறார். நவம்பர் இரண்டாவது வாரம் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள திரு. ஜயவர்த்தன டில்லி வருகிறார். அப்போது தமிழர் பிரச்னைகளைத் தீர்ப்பது குறித்து திருமதி இந்திரா காந்தி—ஜயவர்த்தன பேச்சு நடைபெறும். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை திரு. பார்த்தசாரதி கொழும்பில் செய்வார். அவர் கொழும்பு வருகை இலங்கை அரசு தாமதப்படுத்தியதில் உள்நோக்கம் எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை.

# திறமை மிக்க பணியாளர்

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் புகழுக்கு மங்கா ஒளி விளக்காகப் பணிபுரிந்து அமரத்துவமடைந்த செல்வன் கந்தப்பு தர்மகுலசிங்கம் (ஜெயம்) புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சேவை மனப்பான்மையுடன் திறமைமிக்க பணியாளனாகக் கடமையாற்றி கூட்டுறவுத் துறையில் முன்னணியில் திகழ்ந்தவர்.

இவர் தனது சேவைக்காலத்தில் நேர்மையாகவும், கடமை கண்ணியம், கட்டுப்பாடு, சேவை மனப்பான்மையுடனும் பணிபுரிந்து மக்களின் மனங்களைக்கவர்ந்தது மாத்திரமன்றி எமது பகுதி சமூக, பொருளாதார வளர்ச்சியிலும் முக்கிய பங்கு கொண்டவர். மாசற்ற பண்பு நிறைந்த உள்ளமும், உசார் நிலைச் சுறுசுறுப்புத் தொழிலாற்றலும், எடுத்த கருமத்தை நிறைவேற்றும் சாதுரியமும் இவரின் வாழ்வில் இயல்பாக அமைந்திருந்தன.

எமது சங்கத்தின் வளர்ச்சியில் அமரர் தர்மகுலசிங்கம் காட்டிய ஆர்வத்துடன் சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமென்ற நோக்குடன் தனது வாலிப வாழ்க்கையில் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் பணிகளில் ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

அவரின் அகால இழப்பு எமது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டுமன்றி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினருக்கும் இப்பகுதி மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-சோ. அருணகிரி


**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.30, 6.30,
சந்திரசேகர், சுகாசினி, ராஜீவ்
"பாலைவனச் சோலை"
வண்ணப்படம் - புதியபிரதி

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
M.G.R. - சரோஜாதேவி
அன்பே வா
கலர் — புதிய கொப்பி
Soon
"IT COULD HAPPEN TO YOU"
A Film on V. D.


# இன்றைய பலன்

ஐப்பசி 8-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(25-10-83)

மேடம்: நிதியில் முடக்கம் ஏற்படும் சிலர் வீண் பழிக்கும் இலக்காகுவர் விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும் பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படும் எதிலும் கவனம் செலுத்தவும்.

இடபம்: இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும் உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைக்க நேரிடும் அன்னியர் சகவாசம்ஆபத்தில் மாட்டிவைக்கும்.

மிதுனம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு கொடுத்துவாங்குவதில் நல்ல மனம் உண்டு அந்தஸ்தில் உயர்வுண்டு உறவு முறை பலப்படும்.

கடகம்: ஆணவப் போக்கினால் அடிசறுக்க நேரிடும் வயது முதிர்ந்த ஒரு பெண் மூலம் அவப்பெயருக்கும் இடமுண்டு குடும்பத்தில் சிறிய பூசலுக்கும் இடமுண்டு.

சிங்கம்: விளைபொருள் விருத்திக்கும் விருந்திற்கும் இடமுண்டு தாய் வழித்தனமும் தாராளமாகக் கிடைக்கும் எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை உருவாக்குவீர்.

கன்னி: தெளிந்தமனம் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டுபுதிய வழிகள் மூலம் பணம் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

துலாம்: வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும் உணவு விஷயத்தில் கவனம் செலுத்தவும் வேவுகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார் நண்பர்களுடன் பகை உருவாகும்.

விருச்சிகம்: பகைமையான சம்பவங்கள் இடம்பெறும் களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும் காதல் வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

தனு: எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும் கொடுக்கல் வாங்கல்களினால் பிணக்குகள் ஏற்படும் நண்பர்களை பகைத்துக் கொள்வீர்கள் வீணான சிந்தனைகள் உண்டு.

மகரம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள் அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும் எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியுண்டு.

கும்பம்: செய் தொழில் சிறப்புண்டு புதிய கண்டு பிடிப்புக்களுக்கும் இடமுண்டுபொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம் அரசினர் விருந்துண்டு தொடர்புகளில் திருப்திகாணப்படும்.

மீனம்: வாழ்க்கை அமைதியாகச் செல்லும் எண்ணம் போல் யாவும் நடக்கும் உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# அதிபர் அமரர் மகேசன்



பலர் பிறக்கிறார்கள்! இறக்கிறார்கள்! எல்லோருமே நினைவில் நிற்பதில்லை. லட்சத்தில் ஒருவரே இறந்தும் இறவாமல் வாழ்கின்றார்கள்! அந்த வகையில் கடந்த பத்தாண்டு காலம் கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய அமரர் சுப்பிரமணியம் மகேசன் ஆற்றிய சேவையும், அளப்பரியதொண்டும், என்றும் வாழ்ந்துகொண்டேயிருக்கும்; அவரை காலமெல்லாம் மறக்காமல் மனதில் வைத்திருக்கும்!

மகேசன் அவர்கள் வளைந்து கொடுக்காத நேர்மைக்கு இலக்கணமாகத்திகழ்ந்தவர். பல்லாயிரக்கணக்கான மாணவர்களை மனிதராக்கும் பெரும் கைங்கரியத்தை நேர்மையுடன் செய்துமுடித்தவர்!

பிறர்மனதை நோக வைக்காத பண்பு, ஏழைகளிடம் இரங்கும் தன்மை-மாணவ சமுதாய மத்தியில் அவருக்கு ஒரு உயர்ந்த இடத்தை அளித்து வந்தன.

பாடசாலையே தனது வாழ்வென இருந்தகாரணத்தால், அவர் பாடசாலையை பெரிதும் வளர்த்தார்; விவேகானந்தா வித்தியாலயத்தில் பாடசாலை நேரத்துக்குப்பின்னரும் இருந்து கடமையாற்றினார். சிறுபிள்ளைகளோடு தனது அலுவலகத்தில் சிரித்துபேசி மகிழும் காட்சியே ஒரு தனிக்காட்சி!

வித்தியாலயத்தில் தலை நிமிர்ந்து நிற்கும் மூன்றுமாடிக் கட்டடம் அவர்சேவைக்கு ஒரு சான்றாக உயர்ந்து நிற்கிறது

இறக்கும்போது மகேசனுக்கு வயது 58. வட்டுக்கோட்டைடையைச் சேர்ந்த சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதிகளுக்கு மகனாகப்பிறந்தார்! யாழ் இந்துக்கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்ற மகேசன், 1944ம் ஆண்டு லண்டன் மெட்ரிக்குலேசன் பரீட்சையில் சித்தி பெற்று, 1946ம் ஆண்டு வட்டு இந்துவில் ஆசிரியராக கடமையேற்றார். 1950 வரை அங்கு படிப்பித்தார். மகரகமவில் ஆசிரியப்பயிற்சியை முடித்து வட்டு இந்துவில் 1952முதல் 1973வரை பதில் அதிபராகக் கடமையாற்றினார். 1973ம் ஆண்டு விவேகானந்தா வித்தியாலய அதிபராக கடமையேற்றார்.

கொழும்பில் தொழிற் சங்க நடவடிக்கைகளில்ஈடுபட்டார். கலைத்துறைக்கு சேவைசெய்தார்.

அவர் ஆற்றிய சேவைகள் என்றும் அவரை மனதில்வைத்திருக்கும்!

நாளை அன்னாரின் 31ம் நாள் நினைவுதினம்.

- பரந்தாமன்

# நூல்மதிப்பீடு

நூல்: தொடர் மொழிப் பொருளுக்கு ஒரு சொல்.
வெளியீடு: தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.
விலை: ரூபா 3-75

நீண்டபல தொடரால் உணர்த்தும் பொருளை ஒரு சொற் பிரயோகித்து உணர்த்துவது மொழிநடைக்கு ஆற்றலும் வனப்பும் அளிக்கும். அன்றியும், அத்தகைய சொற்களின் அறிவு, பொருட் சுருக்கம் எழுதும்போது மிகுந்த பயனளிக்கும். இந்தவகையில் ஆக்கப்பட்டதே 'தொடர் மொழிப் பொருளுக்கு ஒரு சொல்' என்னும் நூலாகும்.

இந்நூலில், அங்கதம், ஒட்டம், இடைக்காலத் தடையுத்தரவு, இடை நிறுத்தம், இருட்டடிப்பு, ஒத்திவைப்புத் தண்டனை, ஆட்கொணர்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, கம்மாலை, சுமைதாங்கி, தேடற்கட்டளை, நிருமாலியம், விழிப்புக்குழு என்பனபோன்ற 400 சொற்களுக்கான விளக்கங்கள் காணப்படுகின்றன. க. பொ. த. ப. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அன்றியும். கனிஷ்ட வகுப்பு மாணவர்களுக்கும் கல்வியில் நாட்டமுடைய ஏனையோருக்கும் இந்நூல் பெரிதும் பயனுடைத்து.

—பண்டிதர்
அ. ஆறுமுகம்

# "இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்க ஜயவர்த்தன துரிதமாக இயங்க வேண்டும்"

## சென்னை 'ஹிந்து' ஏடு கருத்து

இலங்கையில் அண்மையில் நடந்த இனக்கலவரங்களில் இலங்கைத் தமிழர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். ஆனால் அக்கலவரங்கள் நடந்ததிலிருந்து இன்றுவரை அவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதனால் இலங்கையில் ஒரு பயங்கரச் சூழ்நிலை உருவாகிவருகிறது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சுட்டிக்காட்டியுள்ளார்,

இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு இலங்கை அதிபர் ஜயவர்த்தன அரசியல் ரீதியாகச் சிறந்த தீர்வு காண முன்வருவார்என்று இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால் ஜயவர்த்தனவின் அரசாங்கமோ, சுமூகதீர்வு காண்பதற்குப் பதிலாகத் தொடர்ந்தும் தமிழ் பயங்கரவாதிகள் பற்றியே அலட்டிக்கொண்டிருக்கின்றது.

### அந்தஸ்தில் மாற்றமில்லை

தற்போதைய இலங்கை அரசாங்கம் 1977ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தது. இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பதாக அது உறுதியளித்தது. இலங்கைத் தமிழர்களுக்கு குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கு மகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நிர்வாக ரீதியான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை இலங்கை அரசு உருவாக்கியது. ஆனால் அச்சபைகளால் தமிழ்மக்கள் நலன்கருதி அவர்களின் அந்தஸ்தில் மாற்றங்கள் ஏற்படும் வகையில் எதுவும் சாதிக்கப்படவில்லை.

தொடர்ந்தும் இலங்கைத் தமிழர்கள் வெகுவாகப்பாதிக்கப்பட்டே வருகிறார்கள் ஆயுதப்படைகளில் சேர்த்துக் கொள்ளல், பல்கலைக்கழக அனுமதிபெறல் உயர்நிர்வாக பதவிகளைப்பெறல் போன்றவற்றில் தமிழர்கள் மீதுபாகுபாடு காட்டப்படுகின்றது.

### நெருக்கடியில் ஜயவர்த்தன

ஜனாதிபதி ஜயவர்த்தன இத்தகைய பிரச்னைகளைத்தீர்ப்பதில் அசட்டையாக இருப்பதனால் அவர் மிகுந்த நெருக்கடிமிக்க பாதையிலேயே சென்றுகொண்டிருப்பதை அறிய முடிகின்றது. இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதி திரு ஜி. பார்த்தசாரதியுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவும் அவர் விருப்பமுடையவராகக் காணப்படவுல்லை.

### இந்தியா வருவது சந்தேகம்

ஆயினும் திரு ஜயவர்த்தன அடுத்த மாதம் பொதுநலவாய தலைவர்கள் மகாநாட்டுக்கு இந்தியா வரவிருப்பதால் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடன் நேரடியாக இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி பேசுவார் என்று அறியப்படுகிறது. எவ்வாறாயினும் இந்திய விஜயத்தை மேற்கொள்வாரா என்பது சந்தேகமே.

### சிறிமா கருத்து

இதேவேளை இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக சில இலங்கை அரசியல் கட்சிகளை ஜனாதிபதி ஜயவர்த்தன பேச்சுக்கு அழைத்தார். ஆனால் இலங்கை முன்னை பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவ் அழைப்புப்பற்றித் தெரிவித்ததாவது: ''இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுக்கள் நடத்தப்பட்டால் அப்பேச்சுக்களுக்கு இலங்கைத் தமிழர் விடுதலைக்கூட்டணியும் அழைக்கப்படவேண்டும். இல்லையேல் ஜயவர்த்தனவின் அரசாங்கத்தினால் இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை இலங்கைத் தமிழர்களோ, அல்லது சிங்களவர்களோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்'' என்றார்.

### துரிதமாக இயங்கவேண்டும்

இலங்கைத் தமிழர்விடுதலைக் கூட்டணியினரும் தமது தனிநாட்டுக் கோரிக்கையை விட்டுக்கொடுப்பவர்களாகத் தெரியவில்லை இ. த. வி. கூ. பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் ''தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக மாற்றுக் கோரிக்கையைத் தமிழர் கொண்டிருப்பதற்கு ஜயவர்த்தனவே வழிகாணவேண்டும்'' என்று தெரிவித்துள்ளார். இந்நிலையிலேயே திரு. ஜயவர்த்தன இந்தியப் பிரதமரின் உதவியை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்.

திருமதி இந்திரா காந்தி இந்தியா இலங்கை அரசின் உள்விவகாரங்களில் தலையிடாதென்றும், ஆனால் இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்தும் பாதிப்படைந்துவருவதை இந்தியா அனுமதியாதென்றும் கூறியுள்ளார்.

இக்கூற்று, இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியா கொண்டுள்ள நிலையைத் தெளிவாக விளக்குகின்றது எனவே இலங்கை அதிபர் ஜயவர்த்தன இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்த்து, அவர்கள் மீதுள்ள இலங்கை அரசின் பாகுபாடான கொள்கைகளை நீக்க அவசியம் துரிதகதியில் இயங்கவேண்டும்.

நன்றி: சென்னை 'ஹிந்து'

---

## வேலை நீக்கம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

### தனியார் துறை ஊழியர்

தலைவர் திரு. கே. ராஜசிங்கம் பேசுகையில் கூறியதாவது: தமுழர் ஆசிரியர் சங்கம் ஒரு தொழிற்சங்கம், எமது இணைப்புக்குழு அப்படியில்லை. பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பற்றி இணைப்புக்குழு கவலையீனமாக விட்டுவிடவில்லை. எங்களால் செய்யக்கூடியவற்றைச் செய்துகொண்டுவருகிறோம். பாதிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்கள் சுமார் 5500 பேர் வரை இருக்கிறார்கள் என்று நாம் கருதுகிறோம். ஆனால் இதுவரை 2200 பேர் பற்றிய விபரங்கள் தான் கிடைத்திருக்கிறது. தொழில் உதவி ஆணையாளர் தனியார் துறை ஊழியர்களை நேரில், இம்மாதம் 27ம் தேதி யாழ். நகர மண்டபத்தில் சந்திக்கவிருக்கிறார். ஆதலால் இதுவரை தகவல்கொடுக்காத தனியார்துறை ஊழியர்கள் 25ம் தேதி நேரில் சென்று, தங்களைப் பற்றிய விபரங்களைக் கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட தனியார்துறை ஊழியர்களுக்கு இங்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும். அப்படி பெறமுடியாத நிலையில் உள்ளவர்களுக்கு அரசு நிவாரணம்வழங்கவிருக்கிறது.

### நவம்பர் வரை விசேட லீவு

கடுதாசி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவரும், வேலை நீக்க நோட்டீஸ் பெற்றவருமான திரு. என். எஸ். கிருஷ்ணதாசன், வழமையான நிலை திரும்பாததனாலும், நாட்டில் இன்னும் அமைதி ஏற்படாததினாலும் அக்டோபர் 31-ம் தேதி வரை வழங்கப்பட்ட விசேட லீவை, மேலும் ஒரு மாதம் நீடித்து டிசம்பர் 30-ம் தேதி வரை வழங்க வேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டு வந்தார்.

திரு. வ. ஆறுமுகம் பாதிக்கப்பட்ட ஊழியர் தொடர்பாக அமைச்சரவை எடுத்த முடிவு அமுல்செய்யப்படும் வரை வேலைக்கு திரும்புவதில்லை என்ற திருத்தப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார். இது சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. (க)

---

## இப்படியும் நடக்கிறது

வடபகுதி பாராளுமன்ற உறுப்பினர் (இப்பொழுது பதவி இழந்த) ஒருவரின் செயலாளராகக் கடமையாற்றியவருக்கு அரசு அனுப்பிய மாதாந்த படிக்குரிய காசோலை வந்த வேகத்திலேயே திரும்பியும் விட்டது!

நடந்தது இதுதான்:

கடந்த மாதத்திற்குரிய படி இவருக்கு, அரசு காசோலையாகக் கிடைத்ததும், அவர் காசோலையை ஒரு ஸ்தாபனத்தில் கையளித்து ரொக்கப் பணத்தையும் பெற்றுக் கொண்டார். ஆனால் அக் காசோலை வங்கியில் செலுத்தப்பட்டபோது சில நாட்களில் வெறுமனே திரும்பிவிட்டதாம்!

காசோலை 'ஸ்ரொப் பேமன்ற்' செய்யப்பட்டதற்குக் காரணம், எம். பி. பதவி இழந்ததும் செயலாளரும் பதவி இழந்து விட்டதா? ஆனால் எம். பி. பதவி இழந்தது இம் மாதம் 21-ம் திகதிதானே!

— ஊடுருவி

---

## பரந்தனில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற இரு இளைஞர்கள் அங்கிருந்த வேலாயுதபிள்ளை தங்கராசாவை துப்பாக்கியை காட்டிப் பயமுறுத்தி கட்டிப் போட்டுவிட்டு இக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைசெய்துவருகின்றனர். (க-கு)

## அத்துமீறி.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என மாநகரசபை ஊழியர்கள் தெரிவித்தனர். இவர்களைவெளியேறுமாறு3 தடவை முன்னறிவித்தல் கொடுத்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர். (க)

## கறுப்புச்சட்டை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானத்தை வாசிக்க சபை ஏகமனதாக நிறைவேற்றியது.

முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன், இலங்கைச் சம்பவம் குறித்த தமிழக அரசின் கண்டனப் பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்தார். இப்பிரேரணை மீதான விவாதம் இன்று ஆரம்பமாகும். (கு)

## ராஜினாமா

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு தெ.ப.ப.நோ. கூ. சங்க நெறியாளர் குழுவிலிருந்து திரு வே.சின்னத்தம்பி. இ.இராசரத்தினம் ஆகியோர் ராஜினாமாச் செய்துள்ளனர்.

5 ஆண்டு காலமாக நெறியாளர் குழுவின் அங்கத்தவர்களாகக் கடமையாற்றி வந்த இவர்கள் இக்குழுவில் அங்கம் பெறாத ஏனைய கிளையினருக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலேயே தாம் ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நீர்வேலி தெற்கு கோப்பாய் வடக்கு கிளைகளின் பிரதிநிதிகளாக கடந்த மார்ச் மாதம் நடைபெற்றதேர்தலில் இரண்டாம் தடவையாகவும் வெற்றி பெற்று பதவி வகித்து வந்தனர்.

## யாழ். பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

எமது படிப்பு எமது மண்ணில். வேண்டாம் எமக்கு வெளிநாட்டுக் கல்வி'' என்ற சுலோகங்களை தாங்கிய அட்டைகளை மாணவர்கள் ஏந்திச் சென்றனர்,

நண்பகல் பன்னிரண்டு மணிக்கு ஊர்வலம் யாழ் பல்கலைக்கழ உபவேந்தர் காரியாலத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தில் வந்த மாணவர் பிரதிநிதிகள், தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனிடம் கையளித்தனர். பின்னர் அம் மகஜர்களை, யாழ் பல்கலைக்கழக பணியாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். தேவராஜனிடமும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியசங்கத் தலைவர் பேராசிரியர் க. ஆறுமுகத்திடமும் கையளித்தனர்.

### உபவேந்தர் வசதி

உப வேந்தர் பேராசிரியர் சு. வித்யானந்தன் மகஜரைப் பெற்றுக்கொண்டு உடனடியாக ஆவன செய்வதாகவும், விசேட அக்கறை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இப்பிரச்னைக்கு உடன் தீர்வு காண தம்மாலான முயற்சிகளை எடுப்பதாக பணியாளர்சங்க தலைவரும் ஆசிரியர் சங்கதலைவரும் தெரிவித்தனர்.

இதனைத்தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக வளவிற்குள், மாணவர் அவைச்செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஜுலை கலவரத்தில் பலியானவர்களுக்கு இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இக்கூட்டத்தில் பல்கலைக்கழக பணியாளர் சங்க பிரதிநிதி எஸ். தேவராஜன் சங்கைக்குரிய சகோதரிகள் மாணவர், மாணவிகள் உரையாற்றினர்கள். (க)

---

## யாழ். லயன்ஸ் பத்தாவது ஆண்டுவிழா

# அகதிகளுக்கு புனர்வாழ்வு; ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பல ஸ்தாபனங்களுக்கு அன்பளிப்புகளை வழங்கியதுடன், புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் ஆரம்பித்து வைத்தது.

முன்னாள் லயன்ஸ் கழக ஆளுநர் டாக்டர் டபிள்யு எ. பேர்டினன்ட் இந்த பத்தாவது ஆண்டு பூர்த்தி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணம் கில்னர் கட்டிடத்தில், கலவரங்களை அடுத்து அகதிகளாக வந்தஆறு தையல்காரர்களுக்குத் தையல் நிலையமொன்றை யாழ். லயன்ஸ் கழகம் நிறுவிக் கொடுத்தது, இவ் ஆறு பேரில் நால்வர் பெண்கள். இருவர் ஆண்கள். இவர்களுக்கென மூன்று தையல் இயந்திரங்களையும், ஏனைய தையல் உபகரணங்களையும் டாக்டர் பேர்டினன்ட் வழங்கி அத்தையல் நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் மனநோயாளர் சிகிச்சைப்பிரிவினையும் திருத்திஅமைத்து நேற்று தெல்லிப்பழை வைத்தியசாலை நிர்வாகிகளிடம் அப் பிரிவை யாழ் லயன்ஸ் கையளித்தது.

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிலுள்ளசிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கும் யாழ்ப்பாணம் லயன்ஸ்கழகம் கேட்டுக்கொண்டதன்பேரில் 21 படுக்கை மெத்தைகளை டாக்டர் பேர்டினன்ட் கையளித்தார்.

கைதடி வயோதிபர் நிலையத்துக்கும் யாழ் லயன்ஸ் கழகத்தினர் தமது பத்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும்வகையில்பெறுமதிமிக்கமருந்துவகைகளை அன்பளிப்புச்செய்தனர்.

இவற்றுடன் ஆங்கில வகுப்பொன்றையும் யாழ்ப்பாணம் லயன்ஸ்கழகத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர். இவ் வகுப்பு இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆறு மாத துரித பயிற்சி வகுப்பையும் மற்றையது ஒரு வருட வகுப்பையும் கொண்டுள்ளது. (கி)

---

# தாக்குதல் வழக்கு எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பொம்மைவெளி தாக்குதல் வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு யாழ். நீதவான் கே. வி. எஸ். வரதராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் பொம்மைவெளியில் 83 ஜூன் 6ம் திகதி அப்துல்காதர் முக்உனும்மாவை தாக்கி பல்லை உடைத்ததாக முகமது காலித் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி ரி. சோமசுந்தரத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். (க)

## பாதிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானவரி இலாகா ஊழியர் சமர்ப்பித்திருந்தனர். இதுவரை இவர்கள் கோரிக்கைக்கு பதில் கிடைக்கவில்லை. இப்பதில் கிடைக்கும் வரை வேலைக்கு செல்வதில்லையென இவர்கள் முடிவெடுத்துள்ளனர். (க-கு)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி [illegible] மேற்கு வீதி, 86-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone, 22389—24126.